Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic

சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ 2026-ல் நான்குஅணிகள் ரூ.2 கோடிவென்றன

சென்னை 21, அக்டோபர் 2026: சாம்சங் இந்தியா இன்று சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ 2026-ன் வெற்றி யாளர்களை அறிவித் தது; இந்த ஆண்டின் பங்கேற்புகள் 28 மாநிலங்கள் மற்றும் ஏழு ஒன்றிய பிரதே சங்களில் உள்ள 648 நகரங்களில் பரவி யிருந்தன.

புதுதில்லி யில் நடைபெற்ற கிராண்ட் ஃபைன லில், தங்களது தொழில் நுட்ப அடிப்படையி லான தீர்வுகளை முன் னெடுத்துச் செல்ல சாம்சங்-இடமிருந்து மொத்தம் ரூ.2 கோடி மதிப்பிலான இன்க்யூ பேஷன் மானியங் களை நான்கு அணிகள் வென்றன.

வெற்றி பெற்ற அணிகள் - உத்தரப் பிரதேசம், ராய்பரேலி யைச் சேர்ந்த QuantHunt ; சத்தீஸ்கர், ராய்ப் பூரைச்சேர்ந்த mor phism ; புதுதில்லியைச் சேர்ந்த InnoBotix மற்றும் தெலங்கானா, ஐதராபாத்தைச் சேர்ந்த Somatrace தங்களது மு ன்மாதிரிகளை சந்தைக்குத் தயாரான தீர்வுகளாக மேம்படுத் தவும், எதிர்காலத்தின் ஸ்டார்ட்அப்களாக உருவாகும் வாய்ப் புடன், எஃப்ஐடிடி, ஐஐடி, டெல்லி-ல் வழிகாட்டுதல் மற்றும் இன்க்யூபேஷன் ஆதர வையும் பெறுவார்கள்.

இந்தியாவில் இந்த ஆண்டின் இறுதிப் போட்டியாளர்கள், 135 நகரங்களில் நடத்தப் பட்ட 184 டிசைன்திங் கிங்பட்டறைகள், தீவிர பூட்கேம்ப்கள், முன் மாதிரி உருவாக்கம் மற்றும் பிட்ச் மதிப்பீடு கள் அடங்கிய ஆறு மாத பயணத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட் டனர். அவர்கள் நான்கு கருப்பொருள்களில் தீர்வுகளை வழங்கினர்: ஏஐ லிவ்விங் ஃபார் இந்தியா, ஹெல்த் அண்ட் எஜுகேஷன், ஸ்போர்ட் அண்ட் டெக் மற்றும் என்வி ரான்மெண்டல் சஸ் டெயின்எபிளிட்டி.

இந்தியாவில் இப்போது ஐந்தாவது பதிப்பில் உள்ள சாம்சங் சாம்சங் சால்வ் ஃபார் டுமாரோ, ஒரு உலக ளாவிய திட்டத்தின் ஒரு பகுதியாகும். 2022 முதல், சுமார் 80,000 மாணவர்கள்அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதத்தைப் பயன் படுத்தி தங்கள் சமூகங் களில் உள்ள சவால் களை அடையாளம் கண்டு தீர்வுகளை உருவாக்க பங்கேற் றுள்ளனர்.

நான்கு வெற்றி பெற்ற தீர்வுகள்

ஏஐ லிவ்விங் ஃபார் இந்தியா: QuantHunt – உத்தரப்பிரதேசம், ராய் பரேலி: என்க்ரிப்ஷன் பலவீனங்களை அடை யாளம்கண்டு, எழும்பும் குÕ£ண்டம்-கம்ப் யூட்டிங் அபாயங் களுக்கு நிறுவனங்களின் டிஜிட்டல் அமைப்பு களைத் தயார்படுத்த உதவும் ஏஐ அடிப்படை யிலான சைபர் பாது காப்பு தீர்வு.

ஹெல்த் அண்ட் எஜுகேஷன்: Mor phism – சத்தீஸ்கர், ராய்ப்பூர்: நுண்ணிய முகபாவனைகள் மற்றும் பிற நடத்தை சமிக்ஞை களை பகுப்பாய்வு செய்வதன் மூலம், ஆட்டிசம் உள்ள நபர்கள் உணர்ச்சிகளை சிறப்பாகப் புரிந்து கொள்ள உதவும் வகையில் வடிவமைக் கப்பட்ட ஒரு ஏஐ அமைப்பு.

என்விரான்மெண் டல் சஸ்டெயினெபி ளிட்டி: InnoBotix – புதுதில்லி: Sentinel , மனித குடியிருப்புகளை நோக்கி வரும் வன விலங்குகளைக் கண்டறிந்து முன்கூட் டிய எச்சரிக்கைகளை வழங்க கேமராக்கள், ரேடார் மற்றும் நிலஅதிர்வு தரவுகளைப் பயன்படுத்தும் சூரிய சக்தியில் இயங்கும் ஏஐ எட்ஜ் சாதனம்.

ஸ்போர்ட் அண்ட் டெக்: Somatrace – தெலங்கானா, ஐதரா பாத்: பயிற்சியின் போது முதுகெலும்பின் கோணங்கள் மற்றும் சுமையை அளந்து, துல்லிய விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சி யாளர்கள் காயம் ஏற்படும் அபாயத்தை சிறப்பாகப் புரிந்து கொள்ள உதவும் அணியக் கூடிய ஐஓடி பயிற்சிகருவி.